# CRZ குறிப்பு

## இந்த அட்டையை எப்படி பயன்படுத்துவது?

இந்த அட்டையை கையேட்டின் உதவியுடன் பயன்படுத்தவும்; அல்லது விபரத்தை அவசரமாக தெரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் பயன்படுத்தலாம்.
கையேட்டில் உள்ள விபரங்கள் இந்த அட்டைகளில் சுருக்கி வழங்கியுள்ளோம். ஆகவே, மேலதிக விபரங்களுக்கு கையேட்டை பார்க்கவும்.

விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ள மணடலத்தின் எண்ணே அட்டையில் உள்ள எண்.

நீர்த்துறை தேவைப்படும் வேலைகள் 1234

அணு சக்தி துறையின் திட்டங்கள் 1234

கையேட்டில் ஒவ்வொரு மண்டலமும் எந்த நிறத்தில் எண்ணில் உள்ளதோ, அதே எண்ணும் நிறமும் இந்த அட்டையிலும் உள்ளது.

1 என்றால் CRZ 1 என்று பொருள்
2 என்றால் CRZ 2
3 என்றால் CRZ 3
3* என்றால் CRZ 3 NDZ
3** என்றால் CRZ 3 200–500 மீட்டர்
4 என்றால் CRZ 4







## CRZ 1

1. உயிரியல் சூழல் ரீதியாக நுண்மைத் தன்மை உள்ளவையாகவும் கடற்கரையின் உருக்குலையா நிலையைக் காப்பதில், பராமரிப்பதில் முக்கியப் பங்காற்றும் நில உருவாக்குக் கூறுகளையும் (geomorphological features) கொண்ட பகுதிகள்.

2. உயரலைக்கோடுக்கும், தாழ்வலைக் கோட்டுக்கும் இடைப்பட்ட பகுதி

## CRZ 2

உயரலைக் கோடுவரையிலோ அல்லது அதற்கு நெருக்கமாகவோ வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகள்.

## CRZ 3

3* அதிக அளவில் உபயோகத்திற்கு ஆளாகாத பகுதிகள் மற்றும் CRZ 1 அல்லது 2க்கு உட்படாத பகுதிகள். கடற்கரை கிராமப் பகுதிகள் (வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி காணாத) உள்ளடக்கிய மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டிய கடற்கரைப் பகுதிகள்

## NO DEVELOPMENT ZONE (NDZ)

3** உயரலைக் கோட்டிலிருந்து 200 மீ. வரை நிலப்பக்கமான பகுதி, கடலோடு தொடர்புடைய நீர் நிலைககள் அல்லது நதி முகத்துவாரங்கள் ஆனால் 100 மீ. அல்லது முகத்துவாரம் /ஆறு / நீர் நிலையின் அகலம் இவற்றில் எது குறைவானதோ அது வரை “வளர்ச்சி தடை செய்யப்பட்ட பகுதி”

## CRZ 4

தாழ்வழுத்த அலையில் இருந்து கடல்புறமாக 12 கடல் மைல் வரையிலான கடல பகுதி

கடல் நீரோடு தொடர்பில் உள்ள நீர் நிலைகளில், அது கடலோடு இணையும் இடத்தில் இருந்து அந்த நீர் நிலையில் கடும் கோடை நாட்களில் ஆயிரத்தில் ஐந்து பங்கு உவர்ப்பு உள்ள பகுதி வரை இந்த பிரிவில் அடங்கும்







## நடைமுறைபடுத்துதல்

திட்ட அனுமதிக்கு தேவைப்படும் ஆவணங்கள்

1. ஆவணங்கள் படிவம் 1, விரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை, ஒருங்கிணைந்த முழுமையான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு, பேரிடர் மேலாண்மை அறிக்கை, அபாய/பேரழிவு மதிப்பீட்டு அறிக்கை, மேலாண்மை திட்டம், தடையில்லாச் சான்றிதல், நான்கு தனித்தனி CRZ வரைபடங்கள்

2. கடற்கரை மண்டல மேலாண்மை அதிகார அமைப்பின் பரிந்துரைகள்

3. MoEF அல்லது SEIAA அமைப்பிடமிருந்து அனுமதி

அனுமதி பிந்தைய கண்காணிப்பு

4. அனுமதி பெற்ற திட்டங்கள் என்றால் அனுமதி வழங்கப்பட்ட தேதியில் இருந்து 5 ஆண்டுகள் வரை திட்ட அனுமதி செல்லுபடியாகும்.

5. ஒவ்வொரு அரையாண்டிலும் நிபந்தனைகளை நிறைவேற்றியது பற்றிய அறிக்கையை சம்பந்தப்பட்ட ஒழுங்கமைவு ஆணையத்திடம் தாக்கல் செய்யவேண்டும்.

6. நிபந்தனைகளை நிறைவேற்றியது குறித்த அறிக்கை சம்பந்தப்பட்ட ஒழுங்கமைவு ஆணைய இணையத் தளத்தில் வெளியிடவேண்டும்

பெரும்பாலான சுற்றுச்சூழல் சட்டங்கள் மீனவ சமூகத்தின் மீது குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. சில சாதகமான விளைவுகளையும், வேறு சில பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. எனவே, மீனவ சமுதாய தலைவர்கள், போராளிகள், அறிவாளிகள் அனைவரும் இந்த சட்ட அறிவிக்கையிலுள்ள விவரங்களை தெரிந்து கொள்வது அவசியம். CRZ 2011 குறித்த பாரபட்சமில்லாத புறநிலைப் பார்வையை அளிப்பது என்ற நோக்கத்துடன்தான் இந்தக் கையேட்டைத் தொகுத்துள்ளோம். மீனவ சமூக தலைவர்கள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்கள் பலரின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று, அவற்றையும் உள்ளடக்கி இந்தக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

தலைப்புகள்:

## யாரும் செய்யக்கூடாதவை

### தொழிற்துறை
- புதிய தொழிற்சாலை உருவாக்கம் அல்லது ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகள் விரிவாக்கம் — 1234

### குடியிருப்புகள் மற்றும் கட்டுமானங்கள்
- கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல் — 13*
- ஏற்கனவே உள்ள சாலையின் அல்லது ஏற்கனவே உள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டிடத்தின் கடல் பக்கமாக கட்டிடம் எழுப்புதல் — 2
- உள்ளூர் மற்றும் தேசிய ஊரக திட்டமிடல் நெறிமுறைகளை மீறி கட்டப்படும் கட்டுமானங்கள் — 2
- தற்போதுள்ள அங்கீகாரம் பெற்ற கட்டிடங்கள், அவை அங்கீகாரம் பெற்றதற்கான பயன்பாடு அல்லது தற்போதைய கட்டுமான விதிகளை மீறுதல் — 2
- காலி மனை மேம்பாடு — 3**

### மீன் பதப்படுத்துதல்
- மீன் பதப்படுத்தல், கிடங்கி வசதி உட்பட்டவை புதிதாக உருவாக்கல் அல்லது பெரிது படுத்தல் — 123

### நிலச்சீரமைப்பு, கட்டிடம் மற்றும் கட்டிட புனரமைப்பு
- நிலம் மீட்புப் பணி, வரப்பு அமைத்தல் அல்லது கடல் நீரின் இயல்பான ஓட்டத்தைப் பாதிக்கும் நடவடிகைகள் — 1234
- பொழுதுபோக்குத் தொழிலுக்காக நிலப்பரப்பை மறுவுரிமை கோருதல் — 1234
- அழகுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காக, கடல் மணல் குன்றுகள், மற்றும் இயற்கை அமைப்புகளை மாற்றியமைத்தல் — 1234

### கழிவு மேலாண்மை
- நகரக் கழிவுகள், ரசாயனக் கழிவுகளை வெளியேற்றுவதற்கான பொறியமைவு வசதிகள் அல்லது இருக்கின்ற வசதியை அதிகப்படுத்துதல் — 123
- தொழிற்சாலைகளிருந்தும், நகரங்களிலிருந்தும், குடியிருப்புப் பகுதிகளிலிருந்தும் வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவு மற்றும் கழிவு நீர் — 123
- கட்டுமான இடிபாடுகள் உட்பட பெருநகர அல்லது நகரங்களின் கழிவுப் பொருட்கள், ஆலைகளின் திடக் கழிவுகள், போன்ற பொருட்களை பள்ளமான பகுதிகளில் கொட்டி நிரப்புதல் போன்ற நடவடிக்கைகள் — 123
- எண்ணை மற்றும் இயற்கை எரிவாயு கண்டுபிடித்தல் மற்றும் சுரங்கம், படகு வீடுகள் மற்றும் கப்பல்கள் ஆகியவற்றின் விதி மீறிய செயல்பாடுகளின் விளைவால் ஏற்படும் மாசு — 4

### எண்ணெய் மற்றும் அபாயகரமான பொருட்கள்
- பெட்ரோலிய பொருட்கள் உற்பத்தி அல்லது சேமிப்பு மற்றும் அபாயகரப் பொருட்களை அகற்றுதல் — 1234

### சுரங்கம் அமைத்தல்
- மணல், பாறை, மற்றும் இதர நிலத்தடி பொருட்கள் எடுத்தல் — 1234

### நிலத்தடி நீர்
- உயரலை கோட்டிலிருந்து 200 மீட்டர் வரை நிலத்தடி நீரை எடுப்பது, அதற்குத் தேவையான கட்டுமானங்களை எழுப்புவது — 123*
- 200 மீட்டருக்கும் 500 மீட்டருக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இயந்திரங்கள் மூலம் நிலத்தடி நீர் எடுத்தல் — 123*
- இயந்திரங்கள் மூலம் நிலத்தடி நீர் எடுத்தல் — 3**

### சிறு, பெரு துறைமுங்கள்
- அதிகமாக கடலரிப்புள்ள கடலோரப் பகுதிகளில் கப்பல்துறை மற்றும் துறைமுகம் கட்டுவதற்கானத் திட்டம் — 1234

## விதி விலக்குகள்

### தொழிற்துறை
- நீர்த்துறை தேவைப்படும் வேலைகள் — 1234
- அணு சக்தி துறையின் திட்டங்கள் — 1234
- மரபுசாரா சக்தி மூலம் மின்சார உற்பத்தி — 1234
- கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்கள் — 1234
- மறு கட்டமைப்பு அல்லது பழுதுபார்க்கப்பட வேண்டிய மீனவ சமுதாய மக்களுக்கும் பிற உள்ளூர் மக்களுக்கும் சொந்தமான குடியிருப்புகள் — 13**
- அபாயகரமல்லாத பொருட்களை அறிவிக்கப்பட்ட துறைமுகங்களில் சேமித்து வைத்தல் — 123**
- சூரிய ஒளியால் கடல் நீரை ஆவியாக்கி உப்பு தயாரிக்கும் உப்பளங்கள் — 1
- விவசாயம், தோட்டம் பயிரிடுதல், பூங்காக்கள் அமைத்தல், விளையாட்டுத் திடல்கள், காடு வளர்த்தல் — 3*
- கடல்நீரிலிருந்து உப்பு தயாரித்தல் — 3*

### குடியிருப்புகள் மற்றும் கட்டுமானங்கள்
- வானிலை தொலை உணர் கருவிகள் — 13*
- துறைமுகங்களை இணைக்கும் சாலைகள் — 1
- குழாய் பதித்தல் மற்றும் மின் கம்பி வழித்தடம் அமைத்தல் — 1
- மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் — 13
- மறு கட்டமைப்பு செய்தல் அல்லது பழுது பார்த்தல் — 123
- மீனவ சமுதாய மக்களுக்கும் பிற உள்ளூர் மக்களுக்கும் சொந்தமான குடியிருப்புகள் — 23
- கடற்கரை விடுதிகள் மற்றும் உணவகங்கள் கட்டுதல் — 3**

### மீன் பதப்படுத்துதல்
- மீன் குஞ்சு பொறிப்பகம் மற்றும் இயற்கையாக கருவாடு காயவைத்தல் — 123**
- உள்ளூர் மீனவ மக்களின் வாழ்வாதரங்களுக்குத் தேவையான வசதிகள் — 3*

### நிலச்சீரமைப்பு, கட்டிடம் மற்றும் கட்டிட புனரமைப்பு
- துறைமுகங்கள், சரக்கு முனையங்கள், தோணித்துறை, மீன்பிடி துறை, துறைமுக மேடை, கப்பல்களை பழுது பார்க்கும் மேடை, கடல் வழி சாலைகள், பாலச்சாலைகள் போன்ற ஏற்கனவே உள்ளவை கட்டுமானம் அல்லது நவீனமயமாக்கம் அல்லது விரிவாக்கம் — 1234
- பாதுகாப்பு மற்றும் தற்காப்பு காரணங்களுக்கு — 1234
- கடல் அரிப்பை தடுக்கும் திட்டங்கள் — 1234
- நீர்வழிப்பாதைகள், கால்வாய்கள், துறைமுகங்களை பராமரித்தல் மற்றும் சுத்தப்படுத்துதல் — 1234
- அலை தடுப்பு கட்டமைப்புகளை நிறுவுதல், அல்லது உவர் தன்மை அதிகமாவதை தடுக்கும் நடவடிக்கைகள், நன்னீர் மறு சேர்மானத்திற்கு வழிவகை செய்தல் போன்ற நடவடிக்கைகள் — 1234

### கழிவு மேலாண்மை
- அனுமதி பெற்று சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைக் நீரோடைகளில் விடுதல் — 1234
- வெள்ள நீர் வடிகால் மற்றும் நீரேற்றுதலுக்கான துணை அமைப்புகள் அமைத்தல் — 1234
- கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றும் வசதிகள் — 234
- CRZ1-ல் LTL மற்றும் HTL பகுதிக்கு இடைப்பட்ட பகுதியில் கழிவுநீர்க் கால்வாய்கள், வடிகால்கள் அமைத்தல் — 1
- குடியிருப்புகளுக்கான கழிவு நீர் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றுவதற்கான துணைக்கட்டுமானங்கள் அமைத்தல் — 3*

### எண்ணெய் மற்றும் அபாயகரமான பொருட்கள்
- சரக்கு முனையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அபாயகரப் பொருட்களை இறக்குதல் அல்லது கப்பல்களுக்கு ஏற்றுதல் — 1234
- இயற்கை எரிவாயு, மற்றும் பெட்ரோலிய பொருட்களை பெறுவதற்கும், இருப்பு வைத்தற்கும் தேவையான வசதிகள் — 1234
- கடல் புல் படுகை இல்லாத பகுதியில் திரவ நிலை, இயற்கை எரிவாயு மீள் வாயுமயமாக்கல் வசதிகள் — 1234
- உயரலை மற்றும் தாழ்வலைக்கு உட்பட்ட நுண்ணிய பகுதிகளில் உர உற்பத்திக்குத் தேவையான கச்சாப்பொருட்களையும், உரங்களையும் கடற்கரைப் பகுதியில் இறக்குதல் மற்றும் இருப்பு வைத்தலை அனுமதித்தல் — 1

### சுரங்கம் அமைத்தல்
- கடற்கரை ஒழுங்கமைவு மண்டலம் (CRZ) தவிர, வேறு பகுதிகளில் காணமுடியாத அரிய ரக கனிமங்ககளாக இருந்தால் — 1234
- உயரலை மற்றும் தாழ்வலைக்கு உட்பட்ட நுண்ணிய பகுதிகளில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மூலங்கள் இருப்பதை ஆய்வு செய்தல் மற்றும் வெளியே எடுத்தல் — 1
- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மூலங்கள் இருப்பதை ஆய்வு செய்தல் மற்றும் வெளியே எடுத்தல் — 234

### நிலத்தடி நீர்
- குடியிருப்புப் பகுதிகளில் உள்ளூர் மக்களின் பயன்பாட்டிற்காக மட்டும் — 123
- தண்ணீர் இல்லாத பகுதிகளில் அம்மக்களின் தேவைக்கான குடிநீர், தோட்ட வளர்ப்பு, விவசாயம் மற்றும் மீன் வளர்ப்பு போன்ற தேவைகளுக்காக கைராட்டினங்களைக் கொண்ட சதாரண கிணறுகள் அமைத்தல் — 123**

### சிறு, பெரு துறைமுங்கள்
- பாதுகாப்பு/ராணுவத் திட்டங்கள் என மத்திய வனத்துறை அமைச்சகத்தால் அடையாளம் காணப்பட்ட திட்டங்கள், — 1234

நமாதி- கொள்கை ஆராய்ச்சி மையம்: www.cprindia.org
தக்ஷின் பவுண்டேஷன்: www.dakshin.org